**இந்து சமய அறநிலையத்துறை**
**அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்**

**ந.க.எண்.4361/2020/அ2 நாள்: 07.07.2021**
**வேலை வாய்ப்பு அறிவிப்பு**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் காலியாக உள்ள கீழ்காணும் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்வதற்கு உரிய தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது. விண்ணப்பங்களை **www.tiruchendurmurugantemple.tnhrce.in** என்ற இத்திருக்கோயில் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 07.08.2021 மாலை 5.00 மணி, விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி – இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி, திருக்கோயில், திருச்செந்தூர் - 628215, தூத்துக்குடி மாவட்டம்.

| வ. எண் | பதவி | ஊதிய விகிதம் ரூ. | காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை | கல்வித் தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | உதவி அர்ச்சகர் | Pay Matrix No.12<br>11600 – 36800 | 3 | தமிழ் மொழியில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br><br>அறநிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களால் நடத்தப்படும் ஆகம பயிற்சி பள்ளியில் ஒரு வருடத்திற்கு குறையாமல் பயின்று தேர்ச்சிக்கான சான்று பெற்றிருக்க வேண்டும். |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் 01.07.2021 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 35 வயது மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2. இந்து மதத்தை சார்ந்தவராகவும், இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
3. தனித்தனியாக எழுத்துத் தேர்வு / நேர்முகத்தேர்வு நடத்தப்படும். மேலும் பணியிடத்திற்கு ஆகம வல்லுநரால் தேர்வு நடத்தப்படும்.
4. இப்பணியிடம் (G.O.Ms.No. 114, Tourism, Culture And Religious Endowments (RE 4-2), 3rd September 2020, Aavani 18, Saarvari, திருவள்ளுவர் ஆண்டு –2051) –ன்படி நிரப்பப்படும்

5. பணியிடத்திற்கான கல்வித்தகுதி மற்றும் இதர தகுதி விவரங்களை திருக்கோயில் அலுவலகத்திலும்,www.tnhrce.gov.in,www.tiruchendurmurugantemple.tnhrce.in என்ற இணையதளத்திலும் தெரிந்து கொள்ளலாம்.
6. தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
7. தெய்வீகத்தாலும், இராஜீகத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

இரா.கண்ணன் ஆதித்தன், M.S. (USA)
தக்கார்

ம.அன்புமணி, M.A., B.L.,
இணை ஆணையர் / செயல் அலுவலர் (கூ.பொ)

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்

<u>ந.க.எண் 4361/2020/அ.2 நாள்: 07.07.2021</u>

## விண்ணப்பப்படிவம்

| விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் :- | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர் | |
| 2. | தந்தை / காப்பாளர் பெயர் | |
| 3. | பிறந்த தேதி வயது (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 4. | தற்போதைய முகவரி | |
| 5. | மதம் மற்றும் இனம் (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 6. | கல்வி தகுதி சான்று (நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 7. | முன் அனுபவம் (சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 8. | அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தை சான்று இணைக்கப்பட வேண்டும்) | |

மேற்காணும் விரபங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்றும் இணைக்கப்பட்ட சான்றுகள் அனைத்தும் உண்மை என்றும் உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரரின் ஒப்பம்

<u>குறிப்பு:-</u>

1. விண்ணப்பதாரர்கள் 01.07.2021 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2. இந்து மதத்தை சார்ந்தவராகவும், இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
3. பணியிடத்திற்கு தனித்தனியாக நேர்முகத்தேர்வு நடத்தப்படும். மேலும் ஆகம வல்லுநரால் தேர்வு நடத்தப்படும்
4. தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
5. இத்திருக்கோயில் ஆகம விதிகளின்படியும், நடைமுறை பழக்க வழக்கத்தின் அடிப்படையிலும் பணி நியமனம் செய்யப்படும்.
6. பணியிடத்திற்கு ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.
7. உதவி அர்ச்சகர் பணிக்குரிய விண்ணப்பத்துடன் கல்வி தகுதிக்குரிய சான்றிதழ் மற்றும் பிற ஆவணங்களுக்கு சான்றிட்ட நகல் மட்டுமே அனுப்பப்படவேண்டும். அசல் சான்றிதழை எக்காரணம் கொண்டும் அனுப்பக்கூடாது.
8. விண்ணப்பதாரர் வசிக்கும் எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் விண்ணப்பதாரர் மீது எவ்வித குற்றவியல் நடவடிக்கை ஏதும் இல்லை என்ற சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.
9. விண்ணப்பங்களை அனுப்பும் போது மேல் உறையின் மீது பதவியின் பெயரை குறிப்பிட்டு பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.
10. நேர்முக தேர்வில் கலந்து கொள்வதற்கு எவ்வித பயணப்படியும் வழங்கப்படமாட்டாது.
11. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாள் 07.08.2021-க்கு பின்னர் வரப்பெற்றால் பரிசீலிக்கப்படமாட்டாது.
12. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் ஒப்புதல் அட்டையுடன் மட்டுமே அனுப்ப வேண்டும்.
13. தொற்றுநோய், உடல் மற்றும் மன நிலை குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
14. திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள் அரசு பணி மற்றும் பொது ஸ்தாபனங்களிலிருந்தும், இதர திருக்கோயில்களிலிருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
15. பணி நியமனம் அரசாணை எண்.114 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4-2) நாள்.03.09.2020 விதிகளுக்குட்பட்டது. (பதிவிறக்கம் செய்து அறியவும்)

*********